# ஜீவ விருட்சம்

ஜீவ விருட்சம்" என்பது மெத்தடிஸ்ட் கூட்டமைப்பு மற்றும் திருச்சபைப் பெண்களை ஒன்றிணைத்தல் என்றஅமைப்பின் அங்கிகரிக்கப்பட்ட சின்னம். எப்போதும் பசுமையாக இருக்கும் மரம், தொடர்ச்சியான வாழ்க்கைக்கும், தத்துவத்திற்கும் எடுத்துகாட்டாக விளங்குகிறது. அதனுடைய இலைகள் மேல் நோக்கியும், சுற்றுப்புறங்களில் விரிந்தும் காணப்படுகிறது. இது நம்முடைய சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் மேலே நோக்கி தேவனிடத்திற்கும், பக்கவாட்டில் நம்மை சுற்றி வாழ்பவர்களிடத்திலும் படர்கிறது என்று பொருள்படும். இந்தக் கருத்து, வெளிப்படுத்தின விசேஷம் 22 : 2–ல் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. "நகர வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும் .......... ஜீவ விருட்சம் இருந்தது. அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்".

உலக கூட்டமைப்பின் சாசனத்தில் கையெழுத்திட்டு 75 வருடங்கள் நிறைவு பெற்ற நிலையில், உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு, காயப்பட்ட உலகில் சரீரத்திலும், மனதளவிலும், உணர்ச்சிபூர்வமாகவும், ஆவிக்குரிய நிலையிலும் சுகத்தை கொண்டுவர எடுத்த முயற்சிகளை நினைவு கூர்ந்து, அவர்களை கௌரவிக்கும் விதமாக மேலே குறிப்பிட்ட சாசனத்தின் (Charter) மூலமாகவே நம் கூட்டமைப்பு உருவானது. ஆகவே, இந்த 75 வருட கொண்டாட்டத்திற்கான கருப்பொருள் "75 வருட சுகமளிக்கும் இலைகள்" என்பதே. மேலே உள்ள சின்னமானது அன் கோனன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு, ரோட்டரிகஸ் அவர்களால் (Our design Artist) மெருகூட்டப்பட்டது. இந்த சின்னம், வாழ்க்கையின் தொடர்ச்சியையும், ஜீவ விருட்சத்தின் இலைகள் வளர்வதையும் காட்டுகிறது. நமது கூட்டமைப்பின் ஊழியத்தை இது குறிப்பதாக அமைந்துள்ளது.

75 வருட சுகமளிக்கும் இலைகள்
WFM&UCW
1939 - 2014

மெத்தடிஸ்ட் திருச்சபையின் உலக கூட்டமைப்பும், பெண்களை ஒன்றிணைத்த 1939 முதல் 2014 வரையிலான அதன் வரலாறும்

# 75 வருடங்கள் தேவன் அருளிய

நன்மைகள், வழிநடத்துதல் ஆகியவற்றை நினைத்து மகிழ் கொண்டாடுவது

## 75 – வது ஜூபிலி பதிப்பு / உலகளாவிய செய்தி மடல்

அக்டோபர் 26, 1939–ல் சாசனம் கையெழுத்தானது, அது உலகக் கூட்டமைப்பின் ஆரம்பத்தை குறிப்பிடுகிறது.
இந்த வருடம் 2014, 75வது ஆண்டு விழாவை குறிக்கிறது.
2011 – 2016 என்ற சிறப்பான காலக் கட்டத்தில் உலகக் கூட்டமைப்பின் தலைவர்களின் நினைவுகள் :
"உலக கூட்டமைப்பின் கடந்தக் காலத் தலைவர்களை பார்த்து பிரமிப்படைகிறேன்......... ஊக்குவிக்கும் பொறுப்பு – வளர்ச்சி– சிறப்பிப்பது.......... நம்பிக்கை எங்களை முன்னேற செய்தது"........ கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்"............ " அர்ப்பணிப்பு, .............. ஆதரவு .......... இவை ஆண்டவருக்கு நாம் செய்திடும் சிறந்த ஊழியம்.

### அன் கோனன்



உலக கூட்டமைப்பின் வாழ்க்கையின் மறக்க முடியாத காலக்கட்டத்தில், நான் தலைமைப் பொறுப்பு கொண்டிருப்பதைக் குறித்து தாழ்மைபடுதிறேன். கடந்தக் கால உலகத் தலைவர்களை பார்த்து பிரமிக்கிறேன். அவர்கள் இந்தக் கூட்டமைப்பு வளர்வதற்கு எடுத்த ஊக்கமளிக்கும் காரியங்களையும், இந்த அமைப்பின் மூன்றரை மில்லியன் (35 லட்சம்), உறுப்பினர்கள் மற்றும் உலகக் கூட்டமைப்பினால் தொடப்பட்ட இலட்சக் கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரை நினைக்கும் போது ஆச்சரியப்படுகிறேன். உண்மையிலேயே, நமது தலைவர்கள், 'நம்மை இயேசுவை அறியவும், அவரை அறிவிக்கவும்', நம்மை வழிநடத்தியிருக்கிறார்கள். நான் கொண்டிருக்கும் பதவியினால், நான் சிறப்பு பெற்றிருக்கிறேன், என்று நான் நினைப்பேனேயானால், இந்த இடத்தில் வந்து சேர்வதற்கு நான் செய்த பயணத்தை நான் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

கடந்த அசெம்பளியில் நான் உரையாற்றும் போது, என் தாயார் நான் இரண்டு வயதாக இருக்கும்போது விதவையானதையும், எப்படி நம்பிக்கை அவர்களை முன்னேறி செல்ல உதவியது என்பதையும் நான் குறிப்பிட்டேன். மட்டுமன்றி நானும், ஜான் அவர்களும் , தென் பசிபிக்கில் உள்ள டோங்கா என்ற இடத்திலுள்ள மெத்தடிஸ்ட் ஆலயத்தில் 12 வருடங்கள் ஊழியம் செய்த கடினமான காலக்கட்டத்தில், நம்பிக்கை எங்களை தொடர்ந்து முன்னேறி செல்ல உதவி

contd... on page 3

### ரெகுலா ஸ்டாட்ஸ்



" கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்!" பிலிப்பியருக்கு எழுதின நிருபம் 4:1–ல் காணப்படுகிற இந்த வசனம், நான் 16–ம் வயதில் திடப்படுத்தல் பெறும் போது எனக்கு கொடுக்கப்பட்டது. என்னை பொருத்தமட்டில், இதில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன.

contd... on page 3


### கார்லா பாய்ஸ் சுமித்




லத்தீன் அமெரிக்க பகுதியான பனாமா நாட்டை சேர்ந்தவள் நான். இடரர்டோ சுமித் என்ற போதகராக அபிஷேகம் பெற்றவரை திருமணம் செய்து கொண்டு, அவருடைய ஊழியத்தில் அவருக்கு உதவி செய்கிறேன். எங்களுக்கு மூன்று மகள்கள் உண்டு. சேரன், கேரன், மற்றும் கார்லின். சேரனுக்கும், அவளுடைய

contd... on page 3

### "World Officers - 1956- 2011 -
### "They Passed on the Baton of Faith".




### லூ புப்புலு



நமது சிறந்த நிறுவனத்தின் சகோதரிகள், மகள்கள், தாய்மார்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள்.

தங்களின் தொடர்ந்த ஆதரவுக்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி அறிவிக்க இந்தத் தருணத்தை பயன்படுத்திக் கொள்கிறேன்.

இந்தப் பருவகால மத்தியில், நம் இயக்கத்தின் பல ஏரியாக்களும், குறிப்பாக நம் கூட்டமைப்பும், சந்தித்த பல நெருக்கடிகளை நான் நேரில் கண்டிருக்கிறேன். 2008–ம் ஆண்டு முதல் நிதி நிலைமையில் ஏற்பட்ட சரிவு, அதைத் தொடர்ந்து நம் கூட்டமைப்பின் சில நாடுகள் சந்தித்த பொருளாதார தேக்கம், நெருக்கடி ஆகியவை பெரும் பிரச்சனைகளை உருவாக்கின.

contd... on page 3

## கௌரவ ஆசிரியர் உரை

உலக கூட்டமைப்பிற்குள் அநேக நிகழ்ச்சிகளும், தீர்மானங்களும், செயற்பாடுகளும், வார்த்தைகளும், மேலும் அதிகமான வார்த்தைகளும் இருக்கின்றன. சிறிய, பெரிய நிகழ்ச்சிகள், மக்கள் – உலகத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள். யூனிட் தலைவர்கள், அதின் உறுப்பினனர்கள். ஆனால், ஜீவ விருட்சத்தின் சுகமளிக்கும் இலைகள் அநேக வேளைகளில், தனிப்பட்ட மனிதர்களின் மௌனமான வேலையே.

வெகு காலத்துக்கு முன், ஆதித்தாய்மார்கள் ''ஜீவ விருட்சத்தை,'' கூட்டமைப்பின் சின்னமாக தேர்ந்தெடுத்தார்கள். ஆனாலும் என் யோசனை என்னவென்றால், உலக கூட்டமைப்பின் அங்கத்தினர்களுக்குள், **உலக மெத்தடிஸ்ட் கூட்டமைப்பு மற்றும் திருச்சபை பெண்களை ஒன்றிணைத்தல்** (WFM & UCM) பற்றி ஏராளமான உருவகங்கள் இருக்கக் கூடும்.

உங்களின் (WFM & UCM) பற்றிய உருவகம் உலகத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் ஜீவ விருட்சத்தின் அடிமரமாகவும், கிளைகளாகவும் தோன்றுகிறதா? அல்லது ஜீவ விருட்சத்தின் அடிமரம், கிளைகள் மற்றும் இலைகள், கடவுளின் படைப்பாக ஒன்றிணைத்து கட்டப்பட்டிருக்கிறதா? அல்லது உங்களுடைய சிந்தனையில் நீங்கள் தூரத்தில் வளரும் பெரிய மரத்தில் இணைக்கப்படாத ஒரு சுளி (Twig) யாக விளங்குகிறீர்களா? எப்படியிருந்தாலும், உலக கூட்டமைப்பையும் அதன் சுகமளிக்கும் இலைகளையும் ஆழமாக வேர்விட்டு, தேவனின் மண்ணில் நிலைத்திருந்து போஷிக்கப்பட்டு ஜீவ தண்ணீரால் புத்துணர்ச்சி பெறும் மரமாகவும் உருவகப்படுத்திக் கொள்ளுங்கள்!

ஜீவ விருசட்சத்திற்கு ஏராளமான வேதாகம மேற்கோள்கள் இருக்கின்றன. இவை, தேவனின் நிலைப்படுத்தும் வல்லமையாலும், தேவனுடைய சத்தியத்தினாலும் பெலப்படுத்தப்பட வில்லையென்றால் அந்த மரம் காய்ந்த மரத்திற்கு ஒப்பாய் இருக்கும். "கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்" (எரேமியா 17: 7–8)

உலகக் கூட்டமைப்பின் நோக்கத்திற்கு, மேலே சொல்லப்பட்ட வார்த்தைகள், ஜீவ விருட்சமானது எவ்வாறு ஜீவத் தண்ணீரால் புத்துயிர் பெற்று, நிலைநிறுத்தப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. இந்த ஜீவத்தண்ணீர், ''தேவனும் ஆட்டுக் குட்டியான வரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறது,'' (வெளி. 22:1). உலகளாவிய பெண்கள் ஐக்கியத்தில் இருக்கும் நாம் (சிலவேளைகளில் ஆண்கள்), தேவனுடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், ஜீவ விருட்சத்தின் இலைகளாக, தேவனில் வேரூன்றி நிலைப்பெற்று இயேசு கிறிஸ்துவாகிய ஜீவத்தண்ணீரால் புத்துணர்ச்சி பெறுவோம். இயேசு கிறிஸ்து சொல்கிறார், "நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது, நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும்." (யோவான் 4:14)

**நீங்கள், ஜீவிக்கிற எப்போதும் புத்துணர்ச்சி பெறுகிற ஜீவ விருட்சத்தின் ஒரு பகுதியா அல்லது செத்துப்போன மரத்தின் பகுதியா ?**



**ஜோன் ஸ்டாட்**

# தியானம்

**சுகமளிக்கும் இலைகள்**

உலக மெத்தடிஸ்ட் கூட்டமைப்பும், திருச்சபை பெண்களை ஒன்றுபடுத்துதலும்.

## 75–வது ஆண்டு விழா – ஒரு தியானம்

''அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமாகிறதற்கு ஏதுவானவைகள்.'' (வெளி 22:2)

"ஜெயங்கொள்கிறவன் எவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பேன்''." (வெளி 2:7)

இயேசு சொன்னார், "ஒரு மரம் அதன் கனியால் அறியப்படும்." என்று.

அது 1939–ம் வருடம், மெத்தடிஸ்ட் திருச்சபையின் பெண்கள் குழு ஒன்று ஒரு தரிசனம் பெற்றது. மெத்தடிஸ்ட் பெண்களுக்கென்று உலகளாவிய ஒரு நிறுவனம் இருக்க வேண்டும். வாழ்க்கையின் முழுமையை அடைவதற்காக வாழ்வதும், உழைப்பதும் அதின் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கென்று அவர்கள் ஒரு சின்னத்தை தேர்ந்தெடுத்தார்கள். அதுதான் ஜீவ விருட்சம். அதனுடைய பாகங்கள்– அடிமரம், கிளைகள், இலைகள், கனிகள், ஆகிய இவை மனித குடும்பத்துக்கு எடுத்து காட்டாக இருப்பதுடன், உலகத்தோடு அது கொண்டிருக்கும் தொடர்பு உண்மையிலேயே ஊக்கமும், உற்சாகமும் கொடுப்பதாக விளங்குகிறது. தெரிந்து கொள்ளப்பட்ட காரியங்கள் – சுகம், கல்வி, விசுவாசம், பொருளாதாரம், சமாதானம் யாவும் நம் நாம் எங்கே வாழ்ந்தாலும், எப்படி வாழ்ந்தாலும் வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருக்கிறது.

இயேசு கிறிஸ்து, அவர்கால மொழி, கலாச்சாரம் மூலம் வெளிப்படுத்திய போதனையை சார்ந்ததாய் இவை இருக்கின்றன. ஒரு மரத்தை சின்னமாக தேர்ந்தெடுத்தது, ஆதியாகமம் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றின் அடிப்படையை கொண்டது. நாம் தேவனுடைய வார்த்தையை படிக்கும்போது, உலகத்தை நாம் அதன் அழகு, அதின் வேதனை ஆகிய கோணங்களில் அதைப் பார்க்க அழைக்கப்படுகிறோம். வேதாகமம், அடிமரம், கிளைகள், இலைகள், கனிகள் மற்றும் நிழல் உறைவிடம் ஆகியவற்றை எடுத்துக்காட்டாக உபயோகப்படுத்தியுள்ளது. மரத்தின் உயிர் சக்தி, அதன் அடிமரத்திலுள்ள உயிர்சக்தில் அடங்கியுள்ளது. இந்த உயிர் சத்தை அடிமரம் பூமியிலிருந்து எடுக்கிறது. அவ்வாறு எடுத்து கிளைகளுக்கும், இலைகளுக்கும் பரவச் செய்கிறது. இலைகள் நிழலை கொடுக்கின்றன. சூரியனிலிருந்து, ஜீவனை கொடுக்கும் சக்தியை எடுக்கிறது. அடிமரமும், கிளைகளும், இலைகளும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. எதுவும் மற்றொன்று இல்லாமல் வாழ முடியாது.

மரமானது நம் எல்லாருக்கும் ஒரு பாடத்தை வைத்திருக்கிறது. ஒரு மரம் நோயற்று சுகமாக இருந்து, அது இருக்கும் இடத்திற்கும் உபயோகமாக இருக்க வேண்டுமானால், அதன் எல்லா அவயங்களும் அதற்குத் தேவை. அவ்வாறே, கடவுளின் பிள்ளைகளாகிய நாம், நமக்கிருக்கும் பெலனை பயன்படுத்தி, உலகத்திற்கு ஊழியம் செய்ய வேண்டும்.

குடும்பங்கள், சமுதாயங்கள், நாடுகள் ஒன்றோடொன்று சமாதானத்துடனும், ஆரோக்கியத்துடனும் இருக்காவிட்டால், அவைகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. ஒரு மரத்தின் எல்லா அங்கங்களும் ஆரோக்கியமாய் இருக்க முடியாது.

மரத்திலிருந்து ஜீவனை பெறும் இலைகள் போல் நாம் இருக்கிறோம். மரத்தைப் போல உறைவிடம், நோக்கம், அழகு ஆகியவற்றை உலகிற்கு கொடுக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஜீவனையும், பெலனையும், முழுமையையும் கொடுத்து, தேவை நிறைந்த இந்த உலகில் நம் அன்பையும், நோக்கத்தையும், ஊழியத்தையும், கரிசனையையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள உதவுகிறார்.

நம் ஒவ்வொருவரிலும் ஜீவனுள்ள தேவன் வாழ்வாராக.

மரத்திற்கு சாரம் (Sap) உணவாகிறது போல, நம்மை இரட்சித்த கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் வாழ்விப்பாராக.

நம்மை பெலப்படுத்தி, நம்மை வாழ்விக்கிற பரிசுத்த ஆவியானவர், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் ஊழியம் செய்ய நமக்கு உதவிடுவாராக.



**எடித் M. லோன்**
உலகப் பொருளாளர்
1981– 1986
உலகப் பிரசிடென்ட்
1991–1996.

contd... from page 1

## அன் கோனன்

மனச்சோர்வு என்னை 10 வருடங்கள் வாட்டிய போது, எவ்வாறு நம்பிக்கை எங்கள் குடும்பத்தை கட்டிக் காத்தது என்பதையும் பகிர்ந்து கொண்டேன்.

மனச்சோர்வோடு நான் போராடிய போராட்டத்தைக் குறித்து நான் பகிர்ந்து கொண்டது, நான் அதிலிருந்து மீளவும் மற்றவர்கள் அதிலிருந்து விடுதலை பெறவும் உதவியது என நம்புகிறேன். நரகம் என்பதைப் பற்றி நான் இப்போது அறிந்திருக்கிறேன். ஏனென்றால், சிலசமயம் நான் அங்கே இருந்திருக்கிறேன் என்று உணர்கிறேன். அந்த இருட்டு குழியில் நான் இருக்கும்போது, நான் அங்கே தேவனை காணவில்லை. அவ்வப்போது நினைவாற்றலை இழந்து, பயத்தால் மேற்கொள்ளப்பட்டு, உணவு உண்ணும் விருப்பம், நம்பிக்கை கவனம் ஆகியவற்றை இழுந்து தடுமாறினேன். மருத்துவமனையில் அவ்வப்போது அனுமதிக்கப்பட்டேன். ஐந்து முறை தற்கொலைக்கு முயற்சித்தேன். மிகவும் கடினமான சூழ்நிலைக்குள் என் குடும்பத்தை தள்ளினேன்.

என்றாலும் எல்லாவற்றின் மத்தியிலும் தேவன் என்னோடு இருந்தார். பிரான் என்ற என் சிநேகிதனில் தேவன் இருந்தார். என்னை தத்தெடுத்த தகப்பன் ஹியூஜ் – உடன் இருந்தார். மனநிலை கோளாறை சரிசெய்யும் மருத்துவரோடு அவர் இருந்தார். என் திருச்சபை மூலமாக எனக்கு உதவியளித்த குழுவோடு அவர் இருந்தார். என் கணவர் ஜான் உடன் அவர் இருந்தார். நல்ல நாட்கள் எனக்கு வந்தபோது இவைகளை நான் அறிந்தேன்.

இந்த வேளைக்காக தேவன் என்னை ஆயத்தப்படுத்துவதற்காக, இவையாவற்றின் வழியாகவும் தேவன் என்னை நடத்தினார் என்று நான் இப்போது நம்புகிறேன். முன்பதாக நான் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறேன். தகுதியுடையவர்களை தேவன் அழைக்கவில்லை, அவர் எவர்களை அழைத்தாரோ அவர்களை தகுதிப் படுத்தியுமிருக்கிறார். தேவன் என் வாழ்க்கையில் இடைப்பட்டதினால், நான் இப்போது இவ்விதமாக இருக்கிறேன். ஜீவ விருட்சத்தின் சுகமளிக்கும் இலைகள், என்னை சுற்றிக் கொண்டன.

தேவன் எனக்கு நான்கு அருமையான குழந்தைகளை கொடுத்து ஆசிர்வதித்தார்.

- நிக்கோலாஸ் – பறக்கும் டாக்டர் பைலட்
- கிரிஸ்டன் – குழந்தை மற்றும் பேர்கால மருத்துவர்.
- ஹேமிஸ் – காவல்துறை
- ரோவேனா – சிறப்பு கல்வி ஆசிரியர்
- இரண்டு பேரன்கள் , இரண்டு பேத்திகள்.

தேவனுடைய ஊழியத்தில் உள்ள என் வாழ்க்கை நன்றாக இருக்கிறது.

நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். தாழ்மைப்படுகிறேன்.

**அன் கோனன்**
தென் பசிபிக் பகுதி
உதவித் தலைவர்
2006 – 2011
உலகத் தலைவர்
2011 – 2016.

contd... from page 1

## ரெகுலா ஸ்டாட்ஸ்

1. கர்த்தரில் சந்தோஷமாயிருங்கள். ஏனென்றால், அவர் என் தேவைகளை சந்திப்பவர். அவரில் என் தேவைகளை சந்திப்பவர். அவரில் மகிழ்வது என்பது, என்னுடைய மனநிலையை பொருத்தது அல்ல, ஒரு பெரிய பரிசை பொருத்ததல்ல அல்லது ஒரு சந்தோஷமான நிகழ்ச்சியை பொருத்ததுமல்ல. மாறாக, இந்த சந்தோஷம் எப்போதும் இருக்கும் ஒன்று, எப்படி கடவுளுடைய அன்பு மாறாதிருக்கிறதோ, அதுபோல, அது எப்போதும் நமக்கு அருளப்படுகிறது.

2. சந்தோஷமாயிருங்கள் என்று இரண்டு தடவை கூறப்பட்டுள்ளது. தேவன் நம்மை, நம் அனுபவத்திலுள்ள நேர்மறை காரியங்களை பார்க்க சொல்கிறார். நான் ஒரு ஆசிரியையாகப் பணி செய்வது எனக்கு மகிழ்ச்சி, நண்பர்களுடன் நான் கொண்டிருக்கும் தொடர்பு எனக்கு மகிழ்ச்சி, என் சபையில் நான் உறுப்பினராக இருப்பது எனக்கு மனமகிழ்ச்சி.

2011– லிருந்து உலகக் கூட்டமைப்பில் பணிசெய்வது எல்லாவற்றையும் விட மகிழ்ச்சியானக் காரியம், உலகக் கூட்டமைப்பின் உதவித் தலைவராக பணியாற்றுவதில் எனக்கு எந்த எதிர்பார்ப்பும் எனக்கு இருந்ததில்லை. என் வாழ்க்கை முழுவதுமே மேலான எதிர்பார்ப்புகளை கொண்டிருக்கிறது. என்னோடு இணைந்து பணியாற்றும் உலகத் தலைவர்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்கிறேன். நம் ஒவ்வொருவருக்கும் தனித்துவம் என்று ஒன்று இருந்தபோதிலும், நாங்கள் ஒரு குழுவாக செயலாற்றுகிறோம், பொறுப்புகளை நிறைவேற்றுவதிலிருந்து நிறையக் கற்று கொள்கிறோம்.

ஏரியா கருத்தரங்குகளில் பங்கு பெறுவது பெரும் சிலாக்கியம். தேவனுடைய இராஜ்யத்திற்காக பணி செய்கிற அருமையான சகோதரிகளை தெரிந்து கொள்வதும் சிறந்த சிலாக்கியம்.

நன்றி!

**ரெகுலா ஸ்டாட்ஸ்**
ஏரியா உபத்தலைவர்
ஐரோப்பா கண்டம்
2006–2011
உலக உதவித் தலைவர்
2011 – 2016.

contd... from page 1

## கார்லா பாய்ஸ் சுமித்

கணவர் மரினோவுக்கும், இரண்டு வயதில் இரட்டை குழந்தைகளாக இரு பெண்கள் உண்டு. அவர்கள் அமிரா மற்றும் அலிஸ்.

ஓய்வு நாள் ஆசிரியைகளுக்கு கண்காணியாகவும், மிஷனரி ஊழியம், வெளிப்புற ஊழியத் துறை செயலாளராகவும் நான் வளாக ஊழியத்தில் ஈடுபட்டுள்ளேன். உலக செயலாளராக தேவன் எனக்கு தந்திருக்கும் புதிய பொறுப்பினை நிறைவேற்ற தேவனுடைய ஊழியக் காரியாய் செயல்பட விரும்புகிறேன். ஏரியா கருத்தரங்குகளில் கலந்து கொள்வது எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகிறது.

**கார்லா பாய்ஸ் – சுமித்**
உலகத் தலைவர்
2011 – 2016.

contd... from page 1

## லூ புப்புலு

நமது சிறந்த நிறுவனத்தின் சகோதரிகள், மகள்கள், தாய்மார்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். தங்களின் தொடர்ந்த ஆதரவுக்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி அறிவிக்க இந்தத் தருணத்தை பயன்படுத்திக் கொள்கிறேன். இந்தப் பருவகால மத்தியில், நம் இயக்கத்தின் பல ஏரியாக்களும், குறிப்பாக நம் கூட்டமைப்பும் சந்தித்த பல நெருக்கடிகளை நான் நேரில் கண்டிருக்கிறேன். 2008–ம் ஆண்டு முதல் நிதி நிலமையில் ஏற்பட்ட சரிவு, அதைத் தொடர்ந்து நம் கூட்டமைப்பின் சில நாடுகள் சந்தித்த பொருளாதார தேக்கம், நெருக்கடி ஆகியவை பெரும் பிரச்சனைகளை உருவாக்கின.

ஒன்றிணைத்து நெய்தல் நிகழ்ச்சிகளிலும், கருத்தரங்குகளிலும் நிதி நெருக்கடிப் பற்றி எடுத்துக் கூறியும், எப்படி ஒவ்வொருவரும் உதவி செய்தால் இந்த நிலமையை மேற்கொள்வதுடன் முன்னிருந்த நிலமையை விட உயர்ந்த நிலையை அடைய முடியும் என்று கூறினேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்ற கூடியவையே என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஏனென்றால் எல்லாருக்கும் மன உறுதியும், அர்ப்பணிப்பும் இருந்தது.

இன்னுங்கூட போராடிக் கொண்டிருக்கிற ஏரியாக்கள் உண்டு. நீங்கள் ஒவ்வொருவரும் ஆதரவு கரத்தை நிதி ஆதாரமாக நீட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய இணையத்தள இணைப்பு www.WFMUCW.org. மூலம் உங்கள் ஆதரவுத் தொகையை அனுப்பலாம்.

ஒரு பெண், அதுவும் ஒரு தாயார் ஒருவரைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அன்னாளைப் போல தேவனுடைய ஊழியத்திற்கென்று தன்னுடைய ஒரே புத்திரனை கொடுக்கும் பெலனை அவள் பெற்றிருந்தாள். தன்னுடைய ஜெபம் கேட்கப்படும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. ஒரு நாள் அவன் ஒரு தலைவனாக, இங்கே ஒரு தீர்க்கத்தரிசியாக ஆகக்கூடும் என்ற நம்பிக்கையும் அவளுக்கிருந்தது.

நம்முடைய நிதிநிலமை சீர்படும் என்ற நம்பிக்கையோடு நான் ஜெபிக்கிறேன். என்னுடைய அர்ப்பணிப்பின் மூலமும், உங்களுடைய ஆதரவின் மூலமும், ஆண்டவருக்கு சிறந்த ஊழியம் செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

**லூ புப்புலு**
உலகப் பொருளாளர் 2011–2016

**நம்மிடத்தில் ஒப்புவிக்கப் பட்டதை மற்றவர்களிடத்தில் ஒப்புடைக்க வேண்டும்.**

நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டது எது? எபிரேயர் "மேகம் போன்று நம்மை சூழ்ந்திருக்கும் திரளான சாட்சிகளின்" விசுவாசத்தைப் பற்றி கூறுகிறது.

மேகம் போன்ற திரளான சாட்சிகளாகிய உலகக் கூட்டமைப்பின் முன்னோடிகள் சுமந்து சென்ற ஜீவனுள்ள விசுவாசத்தை சுமந்து முன்செல்ல வேண்டியது நம் கடமை.

அவர்களுடைய உற்சாகத்தை அணைத்துப் போடும் படியாக அநேகத் தடைகள் தோன்றின. ஆனால், அவர்கள் விட்டுவிடவில்லை. அழுத்தங்கள், ஒவ்வொரு நாளும் உருவாகும் நெருக்கங்கள் அனைத்தையும் நாம் மேற்கொள்ள முடியும்.

ஏனென்றால், மனிதனுக்கு நேரிட கூடாத வேறே சோதனை பெண்களாகிய நமக்கு உண்டாகவில்லை. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

அந்த சோதனைகள் யாவற்றினின்றும் தப்பித்துக் கொள்ளும் போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரி 10:13)

அவர்கள் தகுதிக்குத் தக்கதாகக் கொடுத்ததார்கள். ஜெபத்திலும், ஊழியத்திலும் ஐக்கியப்பட்டார்கள்.

# மெத்தடிஸ்ட் பெண்களின் கூட்டமைப்பின் சாசனம்

**நிபந்தனை – I பெயர் –** இந்த நிறுவனம் மெத்தடிஸ்ட் பெண்களின் கூட்டமைப்பு என்று அறியப்படும்.

**நிபந்தனை – II அடிப்படை –** மெத்தடிஸ்ட் பெண்களின் கூட்டமைப்பானது இயேசு கிறிஸ்துவை தேவனின் வெளிப்பாடு என்றும், மனித வர்க்கத்தின் இரட்சகர் என்றும் நம்புகிறவர்களின் ஐக்கியம். “இயேசுவை அறிதல், இயேசுவை அறிவித்தல்” என்ற நோக்கத்தை நிறைவேற்றுகிறவர்கள்.

**நிபந்தனை – III நோக்கம் –** எல்லா ஜனங்கள் மத்தியிலும், வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் கிறிஸ்துவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்க மெத்தடிஸ்ட் பெண்கள் உலகக் கூட்டமைப்பு உதவி செய்ய வேண்டும். சுவிசேஷ ஊழியம், சுகமளிக்கும் ஊழியம், கல்விப்பணி, சமுதாய சேவை கிறிஸ்துவின் பரிபூரண ஜீவனை பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் கொடுக்க வேண்டும்., உலகளாவிய திருச்சபை மூலம் மிஷனரி ஊழிய வாஞ்சையை உருவாக்க உதவ வேண்டும். கிறிஸ்துவ வாழ்வின் ஒழுங்கை ஏற்படுத்த எல்லா தேசங்களிலும் உள்ள பெண்களுடன் ஐக்கியத்தையும், ஒருவருக்கொருவர் உதவி செய்வதையும் ஊக்கப்படுத்த வேண்மு;ம்.

**நிபந்தனை – IV உறுப்பினர்கள் –** மெத்தடிஸ்ட் பெண்களின் உலகக் கூட்டமைப்பில் உறுப்பினர் ஆவதற்கு, நிபந்தனை 2 மற்றும் 3-ன்படி நிறுவப்பட்ட எல்லா நாடுகளின் குழுக்களும் தகுதியுடையவை.. பல தேசங்களிலும் அமைக்கப்படும் கூட்டமைப்பின் நிறுவனங்களிலும் கூட்டமைப்பின் அடிப்படை மற்றும் நோக்கம் தெளிவாகக் கூறப்பட வேண்டும்.

**நிபந்தனை – V உலகளாவிய கவுன்சில் –** மெத்தடிஸ்ட் பெண்களின் உலகளாவிய கவுன்சில் என்ற ஒரு அமைப்பு இந்த ஊழியத்தை முன்னேற்றம் செய்யவும், அதற்கு ஆலோசனைக் கூறவும் அமைக்கப்படும். இந்த கவுன்சில், கூட்டமைப்பில் சேர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு லட்சம் அல்லது அதற்கு குறைவான பேருக்கு ஒரு அலுவலர் என்ற விகிதத்தில், இடம்பெறுவர். ஒவ்வொரு யுனிட்டும் அதற்கென்று எழுதப்பட்ட சட்டத்திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் செயல்படும். கவுன்சிலைப் பொறுத்தவரை அது எல்லா யுனிட்டுகளையும் இணைத்து, திட்டங்கள் நிகழ்ச்சிகள், கொள்கைகள் ஆகியவற்றை பகிர்ந்து கொள்ளும் அமைப்பாக விளங்குவதுடன், அந்தந்த நாடுகளின் சம்மதத்துடன் ஏற்று கொள்ளப்பட்ட திட்டங்களை நிறைவேற்றவும் உதவிடும்.

**நிபந்தனை – VI அதிகாரிகள் –** ஒரு பிரசிடென்ட் ஒரு முதல் உதவித் தலைவர், பொருளாளர், செயலாளர். இவர்கள் கவுன்சிலால் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒரு கூடுதல் உதவித் தலைவரும் இருப்பார். இவர் மெத்தடிஸ்ட் திருச்சபையின் அதிகார எல்லையினாலும், மத்திய கான்பரன்ஸ் மூலமும் தேர்ந்தெடுக்கப்படுவார். மற்ற மெத்தடிஸ்ட் சமுதாயத்தினருக்கும் இவ்விதமான பிரதிநிதித்துவம்அளிக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட அமைப்பு கவுன்சிலின் செயற்குழுவாக செயல்படும். நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் கூட்டங்களில், மேலே நிபந்தனை ஐந்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழு மற்றும் தொடர்பு அலுவலர்கள் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்ற அமைப்பின் உறுப்பினராக விளங்குவார்.

**நிபந்தனை – VII கூட்டங்கள் : –** இந்த கவுன்சில் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை மெத்தடிஸ்ட் திருச்சபையின் ஜெனரல் கான்பரன்ஸ் குறிப்பிட்ட தேதியில், இடத்தில் கூடும்.

**நிபந்தனை – VIII பொருளாதாரம் : –** விசேஷ நன்கொடைகள், இறக்குமுன் எழுதி கொடுக்கப்பட்ட சொத்துகள், பல்வேறு பத்திரங்கள் தாங்களாகவே முன்வந்து இத்துடன் இணைந்த அமைப்புகள் கொடுக்கும் உதவித் தொகைள்.

**நிபந்தனை – XI சாசன திருத்தங்கள் : –** ஓட்டுரிமை பெற்ற கவுன்சிலின் நான்கு வருடத்திற்கு ஒரு முறை கூடும் கூட்டத்தில் இந்த சாசனத்தில் மாற்றங்கள் செய்யப்படலாம். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஓட்டலிப்பவர்களில் முக்கால் பங்குபேர் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். செய்யப்பட வேண்டிய திருத்தத்தைப் பற்றி கூட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே நோட்டிஸ் கொடுக்கப்பட வேண்டும்.

**அக்டோபர் 26, 1939**

மேலே கொடுக்கப்பட்ட, உலகக் கூட்டமைப்பின் சாசனம், அமெரிக்காவில், பாசடினாவில் (கலிபோர்னியா), அக்டோபர் 26, 1939-ல் வகுக்கப்பட்ட சாசனம்.

# போட்டோ ஆல்பம் - சில உலக அசெம்பளிகளின் காட்சிகள் - உலகத் தலைவர்கள் மற்றும் உலக செயற்குழு உறுப்பினர்கள் 1956 - 2011



**உலக படத்திற்கு முன் சாசனம் கையெழுத்திடப்படுகிறது.**
சட்டுர்னினா லாரா, செயலாளர் 1952–1956 மெத்தடிஸ்ட் பெண்களின் உலகக் கூட்டமைப்பின் சாசனத்தில் லேக் ஜீனாலுஸ்காவில், கையெழுத்திடுகிறார், எவலின் ரை நிக்கல்சன் முதல் பிரசிடென்ட்டாக பார்த்துக் கொண்டு நிற்கிறார், அடுத்ததாக கையெழுத்திட.

| | | |
|---|---|---|
| நார்வே & டென்மார்க் | : | Miss. அக்னஸ் நில்சன் |
| சுவீடன், பின்லாந்து, எஸ்டோனியா, லத்வியா, லித்துவேனியா, பின்லாந்து | : | திருமதி. ரெய்மண்ட் வாடே |
| ஜெர்மனி, சுவிச்சர்லாந்து | : | Miss. லூசி அர்சார்ட் |
| யுகஸ்லேவியா & பல்கேரியா | : | திருமதி. பிளாரன்ஸ் ரீவ்ஸ் |
| வடக்கு ஆப்ரிக்கா | : | Miss. குளோரியா வைஸ்னர் |
| நீக்ரோ ஆப்பரிக்கா | : | Miss. சில்சியா கிராஸ் |
| சீனா | : | Miss. சிபர்ள் வாங், யூ சென் லியு |
| பியுக்கின் | : | Miss. பர்ள் வாங் |
| வட சீனா | : | Miss. யூ சென் லியு |
| இந்தியா | : | Dr. மேரி சேனன் |
| பர்மா | : | Miss. மாரின் கேவட் |
| பிலிப்பைன்ஸ் | : | Miss. அன்னா கார்சன் |
| மலேயா | : | மீடெல்ட் டிர்க்சன் |
| பெரு | : | Miss. ஹெட்ரூட் ஹேன்க்ஸ் |
| சிலி | : | Miss. மரியா அக்குரே |
| அர்ஜென்டினா | : | திருமதி ஜார்ஜ் A. மில்லர் |
| உருகுவே | : | Miss.ஹெலன் கில்லிலான்ட் |
| கூபா | : | திருமதி எர்னஸ்டைன் தாக்கர் |
| மெக்சிகோ | : | திருமதி எஸ்தர் ஹொர்நான்ட்ஸ் |
| அமெரிக்கா - விமென்ஸ் பாரின் மிஷனரி சொசைட்டி | : | திருமதி. தாமஸ் நிக்கல்சன் |
| உமன்ஸ் ஹோம் மிஷனரி சொசைட்டி | : | திருமதி. C.P. கோல்குரோவ் |



மெத்தடிஸ்ட் பெண்களின் உலகக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள். அமெரிக்காவின் பாசடினா (கபோர்னியா), அக்டோபர் 26, 1939–கூட்டமைப்பு உருவாக்கப்படும் போது.



ஐந்து பிரசிடென்ட்ஸ் – ஹானலுலு WFMW அசெம்பளி–ஜீலை 15–21, 1981

இடது புறத்திலிருந்து :
திருமதி. ஒக்னா கிம் லா (கொரியா) 1981 – 1986.
திருமதி. எலிசபெத் கிசாக் (இங்கிலாந்து) 1976 – 1981
திருமதி. மிர்த்தா ப்பீபர் (அமெரிக்கா) 1971–1976
பேட்ரிசினியோ காம்போ (பிலிப்பைன்ஸ்) 1996–1971
திருமதி. பிரீர் லாத்தம் (ஆஸ்திரேலியா) 1961 – 1966



செயற்குழு – 1956 – 1961
நான்கு ஏரியா உதவி பிரசிடென்ட்ஸ் (இப்போது ஏரியா பிரசிடென்ட்ஸ் என அழைக்கப்படுகிறார்கள், ஒவ்வொரு நான்கு அதிகாரிகள் அருகில் : டாரதி பரார், இங்கிலாந்து, அமெரிக்கா, பொருளாளர் : பெஸ்அரிங்டன், அமெரிக்கா, உதவி பிரசிடென்ட் லூசி செகோலாஸ், பிரசிடென்ட், ஜெர்மனி : அனிதா அரையா, சி : பிரான்சிஸ்நால், அமெரிக்கா : சைன் நிக்கிஸ்ட், பின்லாந்து : பிரீயர் லத்தம், ஆஸ்திரேலியா




ஜீவ விருட்சத்தின் கொடி, டென்வர் அசெம்பளிக்கு லைபீரிய பெண்களால் தாயரிக்கப்பட்டது. 1971-ல் தேர்வு செய்யப்பட்ட தலைவர்கள் : அனிமேரி கோன், பொருளாளர், மிர்த்தா பீபர், பிரசிடென்ட், பெயித் ரால்சன், உதவி பிரசிடென்ட், ஜீன் ஸ்குயூஸ், செயலாளர்.



செயற்குழு – 1961–1966 பொறுப்பாளர்கள் : முதல் வரிசை
ஏலின் மெக்சினன், கனடா. பொருளாளர் : ப்ரீர் லத்தம்; ஆஸ்திரேலியா.
பிரசிடென்ட் : Dr. டாரதி பெரர். இங்கிலாந்து ; உதவி பிரசிடென்ட் : பிரான்சிஸ் நால் ; அமெரிக்கா; செயலாளர், ஏரியா பிரசிடென்ட்ஸ் & உதவி பிரசிடென்ட்ஸ்
இரண்டாவது வரிசை : அபிஜேக்சன், அமெரிக்கா; ஓடெட் ஓ டி பார்பியரி, அர்ஜென்ட்டினா; சந்தா கிறிஸ்துதாஸ், இந்தியா; பிளாரன்ஸ்சென் தைவான்; R.O.C ஹெலன் ஸ்டிபன்சன்; தென் ஆப்பிரிக்கா; மார்கரட் அன்டர்சன், ஐயர்லாந்து;



செயற்குழு 1971– 1976, முதல் வரிசை : தலைவர்கள் :
மிர்த்தா பீபர், அமெரிக்கா; பிரசிடென்ட், பெயித் ரால்சன், இந்தியா; உதவி பிரசிடென்ட், ஜீன் ஸ்குயூஸ், ஆஸ்திரேலியா; செயலாளர், அன்மரியா கோலின், சுவீடன்; பொருளாளர், ஏரியா பிரசிடென்ட்ஸ் & உதவி பிரசிடென்ட்ஸ் : எலிசா ஒசேரா, பிலிப்பைன்ஸ்; பெர்னிஸ் ஹேவர், நார்வே; அலிசா, P. டிமோண்டி, அர்ஜன்டினா; திருமதி. அடா. சுக்காஸ், பிரேசில்;
இரண்டாவது வரிசை : ஏரியா பிரசிடென்ஸ் & உதவி பிரசிடென்ட் : திருமதி ஜியார்ஜியா நாஷ், ஆஸ்திரேலியா; வீரா டோவி, நியூசிலாந்து; மிட்டில் குணசேகரா, ஸ்ரீலங்கா; எலிசபெத் கிசாக், இங்கிலாந்து; ஆர்டிஸியா ஜோர்டன், அமெரிக்க; டோரிஸ் ஹேண்டி, அமெரிக்கா; மரியா உண்ர்ச், ஜெர்மனி; எஸ்தர் சார், காம்பியா; V.J.மயூசி, தென் ஆப்ரிக்கா.



**செயற்குழு – 1966 – 1971,**
ஏரியா பிரசிடென்ட்ஸ் & உதவி பிரசிடென்ட்ஸ் பொறுப்பில் இருப்பவர்கள்.
**முன் வரிசை :** கோரா அஸ்பி, போர்சுகல்; மார்கரதி ஆஸ்கோம், டென்மார்க்; டாரதி மான்டிரிப், இங்கிலாந்து; யுஜினியா கூப்பர், லைபீரியா; உதவி பிரசிடென்ட் பேட்ரோ சினியோ ஒகாம்போ, பிலிப்பைன்ஸ்; பிரசிடென்ட், வினிபிரட் டட், நியூசிலாந்து; செயலாளர், மிர்த்தா பீபர், அமெரிக்கா; பொருளாளர், **இரண்டாவது வரிசை :** பெயித் ஏல்ஸ்டன், இந்தியா; பிளாரன்ஸ் பேபர், நியூசிலாந்து; தீனாரிசி பிரேசில்; சியா டி ஹெர்மன்ட்ஸ், மெக்சிக்கோ; பிலிஸ்பெட்போர்ட், அமெரிக்கா; டாரதி பெடரிக், ஆஸ்திரேலியா; ஜீன் டெங், சிங்கப்பூர்; பியட்ரிஸ் வில்சன், கனடா; டாரதி சா, ரொடிசியா (ஜிம்பாப்வே); ஜேன் நூம், கானா. பிரீர் லத்தம், பிரசிடென்ட் (ஓய்வு பெற்றவர்).



உலகத் தலைவர்கள், 1981 – 2006
நான்கு உலகத் தலைவர்கள் :
குஷ்நுத் அசரியா (பாகிஸ்த்தான்) : 1996–2001
ஒக்னா கில் லா (கொரியா) : 1981– 1986
ரோஸ்மேரி வாஸ் (இங்கிலாந்து) : 2001–2006
எடித் லோன் (இங்கிலாந்து) : 1991– 1996



**செயற்குழு – 1976 – 1981, முதல் வரிசை**
தலைவர்கள் : எலிசபெத் சார், காம்பியா; உதவி பிரசிடென்ட் : எலிசபெத் கிசாக் இங்கிலாந்து; பிரசிடென்ட் : வில்ா மே ரைஸ், அமெரிக்கா; செயலாளர்; பெர்னிஸ் ஹேவர், நார்வே, பொருளாளர்.
**இரண்டாவது வரிசை :** ஏரியா பிரசிடென்ட்ஸ் & உதவி பிரசிடென்ட்ஸ் : ஐவி மெக்கி, ஜமாய்கா; ஒக்னா கிம் லா, கொரியா; மார்கரட் அயர், ஆஸ்திரேலியா; மோரின் ஹேஹன் டிரிக்ஸ், தென் ஆப்பிரிக்க குடியரசு, எடித் லோன், ஐயர்லாந்து, டோரிஸ் ஹேன்டி, அமெரிக்கா; வீரா டோவி, நியூசிலாந்து; பிரிஸ்சில்லா பீட்டர்ஸ், பாக்கிஸ்தான்; ஹேனா மேசன், சீராலோன்.



**செயற்குழு – 1981 – 1986,** பதவியேற்பு விழாவுக்குப்பின், ஹானலுலுவில், ஜீலை 20, 1981.
முதல் வரிசை தலைவர்கள் : ஒக்னா கிம் லா, கொரியா; பிரசிடென்ட், பிரிசில்லா பீட்டர்ஸ், பாக்கிஸ்தான்; உதவி பிரசிடென்ட் : வீரா டோவி, நியூசிலாந்து, செயலாளர்; Dr. எடித்லோன், ஐயர்லாந்து, பொருளாளர்
**இரண்டாவது வரிசை :**
ஏரியா பிரசிடென்ட்ஸ் & உதவி பிரசிடென்ட்ஸ் : பிரசிடென்ட்ஸ் & உதவி பிரசிடென்ட்ஸ் : பிளாரன்ஸ் இமாத்யூ, கென்யா; கம்பர்ட் லோகான், லைபீரியா; ரூத் G. டி ரூயிஸ், மெக்சிகோ; யூனிஸ் D.S டி ஹோகம், அர்ஜன்ட்டினா; ஆல்சஸ்டிஸ் கோல்மேன், அமெரிக்கா; எடித் மிங், அமெரிக்கா; கிரித் தாம்சன், டென்மார்க்; ஹேனி ஹேன்ஸ்சின், சுவிட்சர்லாந்து; மேரி கார்கில், இங்கிலாந்து; சின்டா சிட்டோரஸ், இந்தோனேசிய; நவமணி பீட்டர், இந்தியா; வசிட்டி ரெய்வாலுய், பிஜி.



**உலகத் தலைவர்கள் : 1996–2001,** இடமிருந்து வலது :
ஜோன் ஸ்டாட் – செயலாளர் பட்டு ஜிம்பாப்வே – உதவி பிரசிடென்ட் குஷ்நுத் அசரியா – பிரசிடென்ட், ரூத் லீ கோர்ட்டர் – உதவி பிரசிடென்ட்.



**உலகத் தலைவர்கள் : 2001 –2006,** இடது பக்கத்திருந்து வலது :
தெல்மா ஜான்சன் – பொருளாளர், ஜேனிஸ் கிளார்க் – செயலாளர், சிந்தியா போசோ – உதவி பிரசிடென்ட், ரோஸ்மேரி வாஸ் – பிரசிடென்ட் & குஷ்நுந் அசரியா, ஓய்வு பெற்ற பிரசிடென்ட்



**உலகச் செயற்குழு : 2006 –2011,** இடமிருந்து வலம் : **முதல் வரிசை :**
ரோஸ் மேரி வாஸ் – பிரசிடென்ட் (ஓய்வு), சித்த மிலன் – உலக பிரசிடென்ட், லிலியன்லஹாய், மேற்கு ஆப்ரிக்கா – ஏரியா பிரசிடென்ட், கத்லீன் பியர்சன், பிரிட்டன் & ஐயர்லாந்து – உதவி பிரசிடென்ட், டாரதி சம்பத் குமார் – தென் ஆசிய ஏரியா பிரசிடென்ட் & ஆசிரியர், ஜீவ விருட்சம்; ஜேன் ஐயர் – லத்தீன் அமெரிக்கா; ஏரியா பிரசிடென்ட், சேரன் யுன் யங், கிழக்கு ஆசியா ஏரியா பிரசிடென்ட் பார்பராஷா, வட அமெரிக்கா; ஏரியா பிரசிடென்ட், மெனா புலோக்கா – தென் பசிபிக் ஏரியா பிரசிடென்ட்
இரண்டாவது வரிசை : தெஜ்வி கொர்ட்ரூட் இன்கூபா, தெற்கு மற்றும் கிழக்கு ஆப்ரிக்கா ஏரியா பிரசிடென்ட்; லைரா ரிச்சர்ட்ஸ், உலகப் பொருளாளர்; கிரீட்ஜி வான் டெர்வீர் – ஐரோப்பிய ஏரியா பிரசிடென்ட், பிரிட்டன் & ஐயர்லாந்து; உதவித் தலைவர், சீலாக் ஒனாகாட், பிரிட்டன் & ஐயர்லாந்து, பிரசிடென்ட்

## உலக அசெம்பளிகளின் தலைப்புகள் - 1956-2011

| தேதி & இடம் | தலைப்பு | தேதி & இடம் | தலைப்பு |
|---|---|---|---|
| நான்கு வருட கூடுகை, பாஸ்டன், அமெரிக்கா, மே, 5–7 (1948) | | | |
| உலகக் கருத்தரங்கு பெர்க், கலிபோர்னியா, அமெரிக்கா, ஏப்ரல் 16–18, 1952 | இவர்கள் அனைவரும் ஒன்றாய் இருக்கவும் | நய்ரோபி, கென்யா, ஜீலை 13–20 1986 (7வது) | கிறிஸ்துவில் வளர்தல் |
| முதல் : லேக் ஜீனாலுஸ்கா வடக்கு கரோலினா, அமெரிக்கா, ஆகஸ்ட் 27–31, 1956 | 1. மாறும் உலகில் சுவிஷேசம் 2. இன்றைய உலகில் பிரஜா உரிமையின் பங்கு 3. ஆவிக்குரிய வாழ்வை ஆழப் படுத்துதல். 4. பெரிய செயல்களுக்கு கிருபை நம் கையை நியமிக்கிறது. | 8வது சிங்கப்பூர் ஜீலை, 15–22 1991 | இயேசு கிறிஸ்து இன்றைய பெலன், நாளைய நம்பிக்கை |
| இரண்டாவது, ஆஸ்லோ, நார்வே, ஆகஸ்ட் 14–16, 1961 | இயேசு கிறிஸ்து வே ஆண்டவர் | 9–வது, ரியோ டி ஜெனிரோ, ஜீலை28 – ஆகஸ்டு 4, 1996 | பரிசுத்த ஆவியே வாரும், எங்களை இணைத்து நெய்யும் |
| 3–வது விம்பிள்டன், லண்டன், இங்கிலாந்து | அவரை அறியவும், அறிவிக்கவும் | 10வது லேலோ போரோ, இங்கிலாந்து ஜீலை 14–21, 2001 | விசுவாசத்தில் முன்சென்று, தேவனின் சுகமளிக்கும் கிருபையை பகிர்ந்தளியுங்கள். |
| 4–வது, டென்வர் கொலரடோ ஆகஸ்ட் 12–16, 1976 | மாறும் உலகில் கிறிஸ்துவப் பெண்கள் | 11வது, WA ஜெஜீ தீவு, கொரியா, 11–16 ஜீலை 2006 | பெண்கள் மாற்றத்தை கொண்டு வருகிறார்கள் |
| 5–வது, டப்லின் ஐயர்லாந்து, ஆகஸ்ட் 19–23, 1976 | கிறிஸ்துவின் மீட்பு பணியில் பெண்கள் | 12வது, WA ஜோகனஸ் பர்க், தென் ஆப்ரிக்கா, ஆகஸ்ட் 2011 | பம்பேலா கிறிஸ்து நம் நம்பிக்கை |
| 6வது ஹோனலுலு ஹவாய், ஜீலை 15–21, 1981 | புதிய கோணங்கள் | | |



**உலகத் தலைவர்கள் : 2006 –2011,** இடது புறமிருந்து வலது: சுனிலா ரூத் – செயலாளர் மியா அட்ஜா – உதவி பிரசிடென்ட், சிட்டா மிலான்– பிரசிடென்ட், லைரா ரிச்சர்ட்ஸ் பொருளாளர்



**உலகத் தலைவர்கள் : 2011 –2016,** இடது புறமிருந்து வலது: அன் கோனன் – பிரசிடென்ட், ரெகுலா ஸ்டாட்ஸ் – உதவி பிரசிடென்ட், கார்லா பாய்ஸ் ஸ்மித் – செயலாளர், லூ பெப்புலு – பொருளாளர்



**உலக செயற்குழுஸஇ 2011 – 2016, முதல் வரிசை :** லு புப்புலு – உலகப் பொருளாளர் ரெகுலா ஸ்டாட்ஸ் – உலக உதவி பிரசிடென்ட், அன் கோனன் – உலகத் தலைவர், கார்லா பாய்ஸ் ஸ்மித் – உலக செயலாளர், சிட்டா மிலன் –ஓய்வு பெற்ற பிரசிடென்ட்.
**இரண்டாவது வரிசை :** ஜீடித் சியாபா – வட அமெரிக்க ஏரியா பிரசிடென்ட், சரோ ஜினி நாகேந்திரன் – தென் ஆசிய ஏரியா பிரசிடென்ட், மார்கரிட்டா டோடோர்வா, ஐரோப்பா கண்ட பிரசிடென்ட், லாரின் ஆங்க் – கிழக்கு ஆசிய ஏரியா பிரசிடென்ட், லின் ஸ்கார்ட் – தென் பசிபிக் ஏரியா பிரசிடென்ட்
**மூன்றாவது வரிசை :** ஐவோன் பெரைரா டயஸ், லத்தீன் அமெரிக்கா ஏரியா பிரசிடென்ட், மெட்டில்டா ஜான்சன் – மேற்கு ஆப்ரிக்க ஏரியா பிரசிடென்ட், அசன் ஜீட் – பிரிட்டன் & ஐயர்லாந்து பிரசிடென்ட், கிரேட்டா மக்வன்கி – தெற்கு & கிழக்கு ஆப்ரிக்கா ஏரியா பிரசிடென்ட், டாரதி சம்பத் குமார் – ஆசிரியர், ஜீவ விருட்சம்.

## ஹெலன் கிம்மின் கனவு - உலக அசெம்பளியில் பங்கு பெற்றோர், ஏரியா & யூனிட்



உலக அசெம்பளி 2001-ல் முதல் ஹெலன் கிம் நினைவு HKMS ஸ்காலர்ஸ்



HKMS உ2006, ரோஸ்மேரி வாஸ் – உடன், இடதுபுறம் – ஒக்னா கிம் லா & சேரன் – யுன் யங்




மூ கே – HMKS 2006, 2011 (வலது கடைசியில்) – தென் ஆசிய ஏரியா கருத்தரங்கில் பங்கேற்பு.




ஆவியில நடவுங்கள் – கலை படைப்பு – தென் பசிபிக் ஏரியா HKMS 2011-2016 – சிஜீபி, மலேமி & நண்பர்கள்

“**Acknowledgments:** Included in this special edition of *“The Tree of Life”* are photographs taken from *“Methodist Women - A World Sisterhood, 1923 -1986”* and those provided by Federation members.”

# 2011-2016, உலக செயலாளர்களின் சிந்தனைகள்

## ஆப்ரிக்க பகுதிகள்

### என்ன வளமான சுதந்தரிப்பு!

75 வருட சுகமளிக்கும் இலைகள். தைரியமான ஜெபிக்கும் பெண்கள் நமக்கு விட்டுபோன சிறந்த பங்கை நான் நினைக்கும் போது, என் பாத்திரம் நன்றியால் நிரம்பி வழிகிறது. தெற்கு மற்றும் கிழக்கு ஆப்ரிக்காவில் நம் கூட்டமைப்பின் வரலாற்றை படிக்கும் போது, ஒமாமா முக்கிட்மி, துசி, ஆண்டி எனிட் போரி, லோரெய்ன் சாலமோன், சாரா மத்லாா் மற்றும் தென்ஜி நுபே ஆகியோருக்கு என் வீர வணக்கத்தை தெரிவிக்காமல் இருக்க முடியாது. இந்த வெஸ்லியன் பெண்கள் ஐக்கியத்தின் நன்மைகளை இளையத் தலைமுறையினா் அனுபவிக்க, அனல் மூட்டி சென்றனா் இவா்கள்.

வாழ்வின் எல்லா எல்லைகளிலும் இந்த மேன்மைமிக்க பெண்கள் ஒரு மாற்றத்தை கொண்டு வந்தனர். தாங்கள் வாழும் சமுதாயத்திலும், மக்கள் மத்தியிலும் இந்தப் பெண்கள் அயராது உழைக்கிறார்கள். எங்கள் யுனிட்டில் கூட்டமைப்புக்காக களைப்படையாமல்



அர்ப்பணிப்புடன் பணி செய்யும் பெண்கள், இருக்கிறார்கள். இளம் பெண்கள் கூட்டமைப்பில் சிறந்த பங்கை நிறைவேற்றி வருகின்றனா். எங்கள் வீட்டில் பணி செய்யும் மூவரும் (படத்தில் காணலாம்) ஜீவ விருட்சத்தையும், அதன் இணையத்தளத்தையும் பயன்படுத்தி மகிழ்கிறார்கள்.

பெண்கள் ஐக்கியத்தின் மூலம் நீங்கள் பெற்று வரும் ஊக்கம் அதிசயிக்கத் தக்கதாய் இருக்கிறது. அவர்கள் எடுக்கும் கவனம் உங்களின் ஆதரவு ஆகியவற்றை நினைத்து தாழ்மைபடுகிறேன். ஒரு சமயம் இதில் அங்கமாகிவிட்டால், ஒருக்காலும் அதை விட்டு பிரியமாட்டிர்கள். இந்த ஐந்தாண்டு காலக் கட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கும் குறிக்கோள்களை எப்படியும் நிறைவேற்றிட வேண்டும் என்று உழைக்கும் யுனிட் தலைவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தோழிகளே, கூட்டமைப்பின் நாளை கொண்டாடிக் கொண்டிருங்கள், ஏராளமான சகோதரிகளுக்கு கல்வி அறிவை கொடுங்கள்

**கிரிட்டா மேக்வன்கி**
பிரசிடென்ட்
தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆப்ரிக்க ஏரியா



**மட்டில்டா ஜான்சன்**
பிரசிடென்ட்
தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆப்ரிக்க ஏரியா

## அமெரிக்கா நாடுகள்

### வடஅமெரிக்காகப் பகுதி : வெவ்வேறு விதமான மக்கள், கலாச்சாரங்கள்



#### ஊழியத்திற்கான வாய்ப்புகள்

வட அமெரிக்கா பகுதியானது, கூட்டமைப்பு தொடங்கிய காலத்தி-ருந்து ஓர் அளவு கூட்டமைப்பின் பகுதியாக இருந்திருக்கிறது. இது பத்து பிராந்தியங்களை உடையது. இதில் ஒன்பது பகுதிகள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ளன, 10-வது பகுதி கரிபியன் மற்றும் அமெரிக்க நாடுகளில் உள்ளது. இந்த ஒவ்வொரு பிராந்தியங்களிலும், ஆப்ரிக்கன் எப்பிஸ்கோப்பல் சா்ச்விமன், ஆப்ரிக்கன் மெத்தடிஸ்ட் எப்பிஸ் கோப்பல் சீயோன் சா்ச் விமன் AME, கிறிஸ்டியன் மெத்தடிஸ்ட் எப்பிஸ் கோப்பல் சா்ச் விமன் (CME), மெத்தடிஸ்ட் சா்ச் இன் தி கரிபியன் அன்ட் தி அமெரிக்காஸ் விமன் (MCCA மற்றும் யுனைட்டட் மெத்தடிஸ்ட் விமன் (UMW) அமைப்புகள் உள்ளன.

தி யுனைட்டட் மெத்தடிஸ் விமன் என்பது மிகவும் பழமையானது. 1869 திலிருந்து செயல்படுகிறது. இதை அடுத்து விமன்ஸ் மிஷனரி சொசைட்டி. இது 1874-ல் உருவானது. உமன்ஸ் ஹோம் அன்ட் ஒவா்சீஸ் மிஷனரி சொசைட்டி 1880-ல் தோன்றியது. தி விமன்ஸ் மிஷனரி கவுன்சில் 1918-ல் அமைக்கப்பட்டது. MCCA என்பது, வட அமைக்கப்பட்டது. என்பது, வட அமெரிக்க ஏரியாவில் தோன்றிய புதிய இயக்கம். இது தனித்து செயல்படும் கான்பரன்ஸாக 1976-ல் உருவாகியது. திருச்சபை அங்கத்தினர்களோடு நெருங்கிய தொடர்பை உருவாக்கும் வாஞ்சை கொண்டிருக்கிறது. இதன் கனவு, 1980-ல் MCCA விமன் பார்படோஸில் கூட்டம் நடத்தியபோது நனவானது.

பல்வேறு நாடுகளிருந்தும், பல்வேறு கலாச்சாரங்களிருந்தும் வந்த பெண்களை கொண்ட இந்த ஐக்கியம், அப்பெண்களோடு நம் விசுவாசம், நம் அனுபவங்கள், தேவன் மீதும், மிஷனரி ஊழியத்தின் மீதும் நாம் கொண்டிருக்கும் வாஞ்சை ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுடன், ஒவ்வொருவரிடமிருந்தும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் கொடுக்கிறது.

ஒரு காரியம் நமது மத்தியில் பொதுவானதாக விளங்குகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகள் ஊழியத்தில் ஈடுபட்டு, மற்றவர்கள் தேவன் தங்களுக்கு கொடுத்திருக்கும் திறமைகளையும், தாலந்துகளையும் அறிந்து கொள்ள நாம் உதவுகிறோம். கூட்டமைப்பின் உறுப்பினர்களாகிய நாம் வேதபாட வகுப்புகளின் மூலமும், பாடல்கள் மூலமும் தேவனிடத்தில் கிட்டி சேர்கிறோம். அத்துடன் பெண்களையும், குழந்தைகளையும் பாதிக்கும் சமுதாய பிரச்சனைகளை தெரிந்து கொள்கிறோம். இதன் மூலம், தங்கள் உரிமையை பெற்றுக்கொள்ள முடியாத குரலற்ற மக்களுக்களின் சார்பில் செயல்படுகிறோம், அவர்களுக்காக பேசுகிறோம்.

பெண்கள் தங்கள் சமுதாயத்திலும், திருச்சபையிலும் தலைவர்களாக பொறுப்பேற்க அவர்களை தகுதி படுத்துவோமாக. அப்படி செய்வதின் மூலம், ஒருவர் மேல் ஒருவர் காட்டும் அன்பும், மரியாதையும் உலகத்திற்கு சாட்சியாக

**ஜீடித் சியாபா**
பிரசிடென்ட்
வடஅமெரிக்க ஏரியா

" நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும் படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுபோகிறதற்கும் நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாய் இருக்கிறது. இதுவும் தேவனுடைய செயலே. ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல. அவர் நிமித்தமாக பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது."

பிலிப்பியர் 1: 27-30

# 2011-2016, உலக செயலாளர்களின் சிந்தனைகள்

## அமெரிக்க நாடுகள்



கிறிஸ்தவனாய் இருப்பதென்பது, அறிக்கை செய்வதைவிட மேலானது. அது விசுவாசத்தின் செயல்பாடு, மற்றவர்களுடன் வாழ்வது, அவர்களுடன் பகிர்ந்து கொள்வது.

சகோதரிகளே : ஆண்டவரிடத்திருந்து நாம் தொடர்ந்து பெற்று கொண்டிருக்கும் மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் நம் எதிரி நம்மிடமிருந்து எடுத்துவிட அனுமதிக்கமாட்டோம்.

நாம் எதிர்பார்க்கும் விதமாக காரியங்கள் நடக்காத போது, நாம் எளிதில் அதை விட்டுவிடுவோம் அல்லது ஏதோ தவறாக செய்துவிட்டோம். ஆகவே அதன் விளைவுகளை சந்திக்கிறோம் என நினைப்போம். மனிதனாக சிந்தக்கும் போது, அதைவிட்டு விடுவோம் அல்லது பிரச்சனைகளில் மூழ்கிவிடுவோம். ஆனால், இந்த சம்பவங்கள் இப்படியும் இருக்கக் கூடும். தேவனே இந்த அனுவங்கள் ஊடாக நம்மை நடத்தி அவற்றின் மேல் வெற்றி கொள்வதற்கான பெலனையும் நமக்கு அருளுவார். இந்த அனுவங்கள் தேவனை மேலும் அதிகமாக அறிந்து கொள்வதற்கு உதவுகிறது. பிலிப்பிய திருச்சபைக்கு எழுதும் போது அப்போஸ்தலன் பவுல், " இப்படி நான் அவரையும் , அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையையும் அருவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்" (பிப்பியர் 3:10) என்று குறிப்பிடுகிறார். விநோதமாகத் தெரிகிறது. ஆனால் உண்மை. பாடுகளின் மூலமாக, ஒரு ஐக்கியத்தை நாம் அனுபவிக்க முடியும், கிறிஸ்துவுடன் ஒரு நெருங்கிய உறவை நாம் இடையில் விட்டுவிட்டால், நம் விசுவாசத்தை விரிவாக்கும் தருணத்தை இழுந்து விடுவோம். தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவருடைய ஜனங்களாய் நாம் நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கும் படியாய் அவர் நம்மை அழைத்திருக்கிறார். அவ்வாறு அவர் செய்யும்போது, நாம் தற்போது செய்யும் ஊழியத்திற்கு மேலான ஊழியத்தை செய்ய, (தலைமைத்துவ நிலையிலோ அல்லது நாம் செய்யும் எதிலும்) நம்மை தகுதிப்படுத்துகிறார்.

இன்று நான் உங்களை அழைக்கிறேன். நீங்கள் செய்யும் காரியங்கள், நீங்கள் நினைத்தவண்ணமாக நடக்கவில்லையென்றாலும், விசுவாசத்தில் தரித்திருங்கள். பிரச்சனைகள் அதிகமானாலும், தேவன் மேல் பற்றுதலாயிருக்க தவறிவிடாதிருங்கள். நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகள் உங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தி, மேலும் அதிகப்படுத்தும். பயப்படாதிருங்கள், நீங்கள் விசுவாசத்தில் நிலைத்திருப்பதினால், தேவன் மிகவும் அழகான திட்டம் ஒன்றை உங்களுக்காக வைத்திருக்கிறார். தேவனிடத்தில் நீங்கள் பெறுகிற மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் உங்கள் எதிராளி பறித்து விடாதிருக்க ஜாக்கிரதையாயிருங்கள்.

"பலங்கொண்டு திடமனதாயிரு, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோட இருக்கிறார்" (யோசுவா 1:9).

இந்த வசனங்கள் நான் நடக்கும் போது என்னோடு வருகின்றன. தேவன் உங்களை ஆசிர்வதிப்பாராக.

**இவான் பெரைரா டயஸ்**
பிரசிடென்ட், லத்தீன் அமெரிக்கா

## ஆசியா



திறமையை வளர்த்துக் கொண்ட பெண்களை பாராட்டுகிறோம்.

கிழக்கு ஆசிய ஏரியா

ஆசிர்வாதமான 75 வருடங்களை கொண்டாடுகிறோம்

உலக கூட்டமைப்பின் கிழக்கு ஆசிய ஏரியா, அந்தப் பகுதியில் நடந்த 10 கருத்தரங்கங்களை நினைவு கூர்ந்து அதை கொண்டாடுகின்றன. ஹாங்காங், இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தைவான், கம்போடியா மற்றும் மங்கோலியா நாட்டு சகோதரிகள், சிங்கப்பூரில் மாநாட்டு சகோதரிகள், மார்ச் 2014-ல் ஒன்று கூடி, 75-வருட பெண்கள் ஐக்கியத்தை கொண்டாடினர்.

மெத்தடிஸ்ட் உலக கூட்டமைப்பும், திருச்சபை பெண்களை ஒன்றிணைத்தலும், (WFMUCW) அதன் 75-வது ஆண்டு விழாவை கொண்டாடும் போது, எங்களின் முன்னாள் தலைவர்களின் நம்பிக்கையும், ஆவல்களையும் மேலும் உயர்த்துகிறோம். தேவன் மனிதர்களைப்படைத்த நோக்கம், பெண்களை திறமை படுத்துவதின் மூலம் நிறைவேற செயல்படுகிறோம்.





நல்ல ஒரு எதிர்காலத்திற்கு தேவன் நம் சகோதரிகளுக்கு நம்பிக்கை கொடுக்கும் போது, அவர்கள் குடும்பத்தையும், திருச்சபையையும், சமுதாயத்தையும், தேசத்தையும் வழி நடத்த திறமை பெறுவது முடியாத காரியம் அல்ல.

திறமையை புதுப்பித்துக் கொள்தலை நாம் கொண்டாடுகிறோம். ஆசியா வில் மாறிவரும் பெண்கள் ஊழியத்தில் ஏற்படும் சவால்களை மேற்கொள்ள கொடுக்கப்படும் பயிற்சி வாய்ப்புக்களுக்காக சர்வ வல்ல தேவனை துதிக்கிறோம். இளம் பெண்கள் மேலே வந்து கொண்டிருக்கிறார்கள். ஒழுங்காக நடக்கும் தலைமைத்துவ பயிற்சிகள், இளம் பெண்களை புதிய ஊழியங்களுக்கு தலைமைத்துவம் கொடுக்கும் தகுதியை கொடுக்கின்றன. இந்தக் காலக் கட்டத்தில், அறுவடையின் ஆண்டவர், பெண்திருச்சபை தலைவர்களை உருவாக்கி, வளர்த்து, வல்லமையான தலைவர்களாக அவர்களை நிலைப்படுத்துவார் என்று நாங்கள் நம்புகிறோம்.

**கர்த்தர் அருளிய நன்மையான ஈவுகளை நினைத்து, அதை கொண்டாடுகிறோம். சர்வவல்ல தேவனுக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.**

**லாரின் ஆங்**
பிரசிடென்ட்
கிழக்கு ஆசிய ஏரியா

### தேவனின் உண்மைத்துவத்தை கொண்டாடுங்கள்

கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். (ஏசாயா 40:31)

# 2011-2016, உலக செயலாளர்களின் சிந்தனைகள்

## ஆசியா

### சுவிசேஷம் - ஆசியப் பெண்களை வல்லமைப்படுத்தியது



முதல் மெத்தடிஸ்ட் மிஷனரிகள் இலங்கையின் தென்முனையில் உள்ள காலே என்ற இடத்தில், 1814-ம் ஆண்டு, 29 செப்டம்பரில் கால் வைத்தார்கள். தாமஸ் கோக் என்பவர் இந்தியாவில் பணி செய்ய வேண்டும் என்று உறுதியாக இருந்தினால் இது நிகழ்ந்தது. பிரிட்டிஷ் கான்பெரன்ஸ் எதிர்ப்பு தெரிவித்தப் போதிலும், கோக் அவர்களின் கனவானது, காலேயில் முதலாவதாக கால் ஊன்றியதின் மூலம் நிறைவேறியது. காலேயிலிருந்துதான் மெத்தடிஸ்ட் கிறிஸ்தவம் இந்தியா, பாக்கிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளுக்கு பரவியது. இந்த நான்கு நாடுகளும் தற்போது WFMUCW-வின் தென் ஆசிய ஏரியாவாக விளங்குகின்றன.

பெண்களின் ஊழியமும், மெத்தடிஸ்ட் பெண்களின் ஐக்கியமும், அக்கால மிஷனரி ஊழியத்துடன் இணைந்து சென்றன. பள்ளிக்கூடங்கள், அனாதை பிள்ளைகளுக்கான இல்லங்கள், ஆலயங்கள் ஆகியன கட்டப்பட்டன, தென் ஆசியா முழுவதும் வளர்ந்தோங்கின. அதின் மூலம் பெண்கள் கல்விக்கும், முன்னேற்றத்திற்கும் உதவியாக விளங்கின.

WFMUCW-வுடன் என்னுடைய முதலாவது தொடர்பு, 1993-ல் பாக்கிஸ்தானிலுள்ள லாஹூரில் நடந்த தென் ஆசிய கருத்தரங்கில் உதயமாயிற்று. ஸ்ரீலங்கா பிரதிநிதியாக நான் அதில் கலந்து கொண்டேன். குஷ்நுந் அசரியா அவர்கள் அப்போதைய பிரசிடென்ட் கூட்டமைப்பின் ஊழியத்தினாலும், இணைத்து நெய்தல் மற்றும் எங்களுக்குள் உருவான ஐக்கியத்தின் மூலமாகவும் அதிகம் கவரப்பட்டேன்.

நான் அப்போது ஸ்ரீலங்காவின் ஏரியா பிரசிடெண்டாக இருந்தபடியால் சுனிலா ரூத் அவர்கள், தென் ஆசிய கருத்தரங்கை கொழும்பு பட்டணத்தில் ஒழுங்கு செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். டாரதி சம்பத் குமார் அவர்கள் ஏரியா பிரசிடென்ட்டாகவும், நான் உதவி பிரசிடென்ட்டகவும், 2006 முதல் 2011 வரையிலான காலக்கட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

தென் ஆசிய பெண்கள் உலகத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதை குறித்து பெருமிதமடைகிறோம்.

- ■ உலக உதவி பிரசிடென்ட், 1971-1976, பெயித் ரால்ஸ்டன், இந்தியா
- ■ உலக உதவி பிரசிடென்ட் 1981-1986 திருமதி பிரிஸ்ஸில்லா பீட்டர், பாக்கிஸ்தான்
- ■ உலக உதவி பிரசிடென்ட் 1986-1991 : நவமணி பீட்டர்
- ■ உலகப் பிரசிடென்ட், 1996-2001 குஷ்நுந் அசரியா, பாகிஸ்தான்
- ■ உலகச் செயலாளர், 2006-2011 : திருமதி. சுனிலா ரூத், பாக்கிஸ்தான்
- ■ ஆசிரியார் - ஜீவ விருட்சம், 2006-2016 டாரதி சம்பத் குமார், இந்தியா

சர்வவல்ல தேவனை ஸ்தோத்தரித்து நன்றி சொல்லி, தென் ஆசிய பகுதி WFMUCW-யின், 75வது ஆண்டு விழாவில் பங்கு கொள்கிறது.

**சரோஜினி நாகேந்திரன்**
பிரசிடென்ட்
தென் ஆசியப் பகுதி

## ஐரோப்பா



உலகக் கூட்டமைப்பும், தேவனுடைய இராஜ்யமும்:
மத்தேயு 13: 26-39,44-52

தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றி விளக்க தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றி விளக்க இயேசு சிலக் கதைகளை சொன்னார். அவை மரமாக வளரக் கூடிய கடுகு விதை, அப்பம் செய்ய தயார் செய்த மாவில் ஒரு பெண் புளிப்பை சேர்த்தாள், புதையல் இருந்த நிலத்தை ஒரு மனிதன் வாங்கினான், விலையுயர்ந்த முத்து, பல்வேறு மீன்களை கொண்ட வலை. கூட்டமைப்பானது, தேவன் ஹெலன் கிம், அவர்களுக்கு கொடுத்த தரிசனத்தின் விதையால் உருவானது. 75 வருடங்களுக்கு முன், மெத்தடிஸ்ட் பெண்கள் அடங்கிய குழுவின் சிந்தனையில் அந்த விதையை விதைத்தார்கள். நாம் இப்போது அது வளர்ந்திருக்கிறதை காண்கிறோம். 1939 முதல், 'ஜெபத்துடன் செயல்' என்ற புளிப்பை அவர்கள் வாழும் சமுதாயத்தில் ஊன்றுகிறார்கள். அதன் மூலம் அநேகர் வாழ்வில் மாற்றங்களை கொண்டு வருகிறார்கள். இந்த உலகளாவிய இயக்கம் ஒரு பொக்கிஷமாகும். அது போற்றப்பட வேண்டியது, பூமியில் புதைக்கப்பட வேண்டியதல்ல. 'இயேசுவை அறிவித்தல்' எங்கள் முக்கிய நோக்கம். "அவரை அறிவிப்பதற்கு எங்களை அர்ப்பணித்திருக்கிறோம். விலையேறப்பற்ற அந்த முத்தை வாங்குவதற்கு அந்த வியாபாரி பணம் சேர்த்தது போல, கூட்டமைப்பின் ஊழியத்திற்காக நாங்கள் பணம் சேகரிக்கிறோம். குறிப்பாக ஹெலன் கிம் நினைவு ஸ்காலசிப்பிற்காகவும், ஐக்கிய நாட்டு சபையில் நாம் உறுப்பினராக விளங்குவதற்காகவும். WFM&UCW-வில் தற்போது எழுபதுக்கு மேலான நாடுகளின் பெண்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டினருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவங்களும், சந்திக்க வேண்டிய சவால்களும் இருக்கின்றன. ஆனாலும், நாங்கள் அனைவரும் ஒரே பெண்கள் ஐக்கியத்தில் இணைந்திருக்கிறோம். நம்மை படைத்த தேவனுடைய வலையில் இருக்கும் மீன்களைப் போல.

தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

**அலிசன் ஜீட்**
பிரசிடென்ட்
ஐரோப்பா : பிரிட்டன், ஐயர்லாந்து ஏரியா



மகரிட்டா தோடோரோவா
பிரசிடென்ட்
ஐரோப்பா- காண்டினென்டல்

## வளரும் அன்பின் விதைகள்

அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி..... உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும், எல்லா உணர்விலும் இன்னும் அதிகமாய் பெருகவும், தேவனுக்கு மகிமையும், துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று, துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

பிலிப்பியர் 1:6, 9-11

# கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம்!



ஜீவ விருட்சத்தின் மூலமாக 75 வருடங்களாக தேவன் அருளிய நன்மைகளை நினைத்து கொண்டாடுவது ஆச்சரியமான வாய்ப்பாக அமைந்துள்ளது. ஊக்கமும், உற்சாகமும் அளித்து, விசுவாசக் கோலை கொடுத்துச் சென்ற அநேக பெண்களை நினைவு கூர்ந்து, அவர்களுக்கிருந்த தரிசனம் மற்றும் அர்ப்பணிப்பை கொண்டாடும் தருணமாக இது விளங்குகிறது! இருந்தபோதிலும், சாதாரண மற்றும் அசாதாரண பெண்களில் அநேகர் செய்திகளில் இடம் பிடிக்காமல், அல்லது பாராட்டப்படாமல் இருக்கக் கூடும். ஆனால் அவர்கள் வாழ்க்கை நம்மேல் இன்றும் ஒரு தாக்கத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது!

உலக கூட்டமைப்பைப் பற்றி எனக்கு அறிமுகமும், ஆர்வமும் 1982–ல் எனக்கு கிடைத்தது. அப்போது நான் ஒரு இளம் தாய். வெலிங்கடனில் நடந்த, நியூசிலாந்து மெத்தடிஸ்ட் பெண்கள் ஐக்கிய கூடுகையில் தயக்கத்துடனே நான் கலந்து கொண்டேன். அப்போது, வீரா டோவி அவர்கள் உலகக் கூட்டமைப்பின் செயலாளர் கூட்டமைப்பின் பணிகளைப் பற்றி பேசினார்கள். நான் பிடிக்கப்பட்டேன். நியூசிலாந்து மெத்தடிஸ்ட் பெண்கள் ஐக்கியத்தில் உறுப்பினராக இருப்பது எனக்கு எவ்வளவு பெரிய சிலாக்கியம், ஆசிர்வாதம் என உணர்ந்தேன். “கிறிஸ்துவை அறிதல், அவரை அறிவித்தல்,” என்ற குறிக்கோளை வைத்துக் கொண்டு செயல்பட்டு, மாற்றத்தை கொண்டு வரும் பெண்களின் இந்த உலகக் கூட்டமைப்பில் பங்கு கொள்வதற்கு நான் இந்த ஒப்பற்ற பெண்கள் ஐக்கியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்று எனக்கு தோன்றியது!

வீரா அவர்கள் உலகக் கூட்டமைப்பின் ஏரியா, உதவி பிரசிடென்ட்டாகவும் (1971–1976) மற்றும் ஏரியா பிரசிடென்ட்டாக (1976–1981) செயலாற்றினார்கள். இவ்வாறு அவர்கள் செயலாற்றிய காலத்தில், குறிப்பாக 1978–ல் டோங்காவில் நடந்த ஏரியா கருத்தரங்கத்தை தலைமைத் தாங்கி நடத்திய சமயத்தில் ஆஸ்டிரலேசியா என்று இருந்த ஏரியா பெயரை தென் பசிபிக் என்று மாற்றுவதற்கு முக்கியமான நபராக விளங்கினார்கள். இதுவே மிகவும் பொருத்தமான பெயர். ஏனென்றால் இந்த ஏரியாவில் அடங்கிய நாடுகள், இந்த பெயர் மாற்றத்திற்கு ஏற்றனவாக விளங்கின. அந்த நாடுகள் – ஆஸ்திரேயா, நியூசிலாந்து, டோங்கா, பிஜி மற்றும் சமோவா. அந்த ஏரியா கூடுகையில் கலந்து கொண்டவர்களில் இரு பிரதிநிதிகள் பாப்புவா நியூகினியா மற்றும் சாலமோன் தீவுகளை சேர்ந்தவர்கள்.

கடந்த ஆண்டுகளில், பாப்புவா நியூகினியா மற்றும் சமோவாவில் நடந்த ஏரியா கருத்தரங்குகளில் பங்கு கொள்ளும் அருமையான வாய்ப்பைப் பெற்றேன். அத்துடன், லிங்கன் பல்கலைக் கழக்தில் (என் வீட்டிற்கு சமீபத்தில் உள்ளது) நடந்த ஏரியா கருத்தரங்கத்தை கூட்டவும், சிலாக்கியம் பெற்றேன்.

வேராவும், அவர்களுடன் மார்கரட் கோர்டான் (ஏரியாபிரசிடென்ட்) மற்றும் ரூத்லீ கோர்ட்டர் (உலகப் பொருளாளர்) அவர்களும் என்னை உருவாக்கியவர்கள், என் ஜெபப்பங்காளர்கள், ஊக்கம் கொடுத்தவர்கள், ஆதரவாளர்கள். வருத்தமான செய்தி என்னவென்றால், இவர்கள் எல்லாரும் கடந்த இரண்டு வருடங்களில் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். என்னை உருவாக்கிய மேலும் ஒருவர் – ஜோன்ஸ்டாட் அவர்கள். இவர்களை PNG–ல் 1994–ல் சந்தித்தேன். உலக கூட்டமைப்பின் காரியங்களில் அவர்களுடைய ஞானத்தை தொடர்ந்து தேடுகிறேன்!

நான் கலந்து கொண்ட முதல் உலக அசெம்பளி தென் கொரியாவிலுள்ள ஜெஜுவாகும். அடுத்த உலக அசெம்பளி ஜோகனஸ்பர்க். மற்றவை எல்லாம் சரித்திரம்”! தேவனுடைய கிருபையினாலும், என் சகோதரிகளாக விளங்கிய பெண்கள் கொடுத்த ஆதரவினாலும், உதவியினாலும் தென் பசிபிக் ஏரியா பிரசிடென்ட்டாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன்!

இப்போது, இந்த நிகழ்காலத்தில், ஏரியா பிரசிடென்ட்டாக எத்தனை ஆசிர்வாதங்கள், உரிமைகள் எனக்கு இருக்கின்றன. தென் பசிபிக் பகுதியிலுள்ள எல்லா சகோதரிகளுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். விசேஷமாக சுதேச ஒழுங்கு கமிட்டிக்கு என் நன்றி. பிரிஸ்பேனில் நடந்த மறக்க முடியாத ஏரியா கருத்தரங்கிற்காக. அதில் கலந்து கொண்டவர்களுக்கு, தங்கள் வாழ்க்கை பயணத்தை சிந்தித்துப் பார்க்கவும், அதை கொண்டாடவும் அந்த கருத்தரங்கு வாய்ப்பளித்தது. மட்டுமின்றி, வாழ்க்கையின் போராடங்களோடும், கொண்டாட்டங்களோடும், கரிசனைகளோடும் வாழ்வதற்கு அவர்களை அது தகுதிப்படுத்தியது. இதன் மூலம், தேவன் எந்த விதமான சூழ்நிலைகளில் வைத்திருக்கிறாரோ அந்த சூழ்நிலைகளில் சுகத்தையும், ஒப்புரவாக்குதலையும், நீதியையும் கொண்டு வரும், தேவனின் கருவிகளாக செயல்பட்டு மாற்றத்தைக் கொண்டுவர உதவி செய்தது.

உலக கூட்டமைப்பின் வருங்காலம் என்ன ? உலக கூட்டமைப்பின் வருங்காலத்திற்காக நாம் ஜெபிக்கிறோம். அதன் கடந்தகால தரிசனத்தை கௌரவப்படுத்துகிறோம். தற்காலத்தை கொண்டாடுகிறோம். ஹெலன் கிம் நினைவு ஸ்காலசிப் மூலம் சேவை செய்ய இளம் பெண்களை தயார் செய்கிறோம். தேவன் அவர்களுக்கு கொடுத்த திறமைகளாலும், தாலந்துகளாலும் தேவனுடைய இராஜ்யத்தை வளரச்செய்வார்கள். கரிசனையுடன் அவர்கள் செயல்படுவார்கள். ஒரு தேவையை கண்டால், அத்தேவையை அவர்கள் சந்திப்பார்கள்.

யோவான் 15:4,5,7

லின் ஸ்காட்
பிரசிடென்ட் – தென் பசிபிக் ஏரியா

## என்னுடைய இரண்டாவது முறை



கிரிக்கெட் விளையாட்டில் மோகம் நிறைந்த நாட்டிலிருந்து நான் வருகிறேன். இந்தியாவில் அநேகம் பேர் இந்த விளையாட்டில் ஆர்வம் காட்டுகிறார்கள். எனக்கு இந்த விளையாட்டில் மோகம் கிடையாது. ஆனால் ‘மோகம்’ என்ற பதத்தை உபயோகித்து என் கருத்தை வெளிப்படுத்த இது உதவுகிறது.

முதல் முறையாக நான் ஏற்றுக் கொண்டிருந்த ஜீவ விருட்சத்தின் ஆசிரியர் பொறுப்பு, 2011–ம் வருட பதிப்புடன் நிறைவு பெற்றது. தேவனுக்கும், கூட்டமைப்பிற்கும் நான் நன்றியுள்ளவளாய் இருக்கிறேன். அநேக மைல் கற்கள் தூரம் நான் பயணித்திருக்கிறேன். ஒரு ஆயரின் மனைவியாக, எங்கள் பகுதியிலுள்ள யுனிட்டுகளில் உள்ள பெண்களுடன் சேர்ந்து உழைப்பது எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகிறது. ஜீவ விருட்சத்தின் ஆசிரியராக நான் கடல்களையும், நிலப்பரப்புகளையும் கடந்து, ஒன்பது ஏரியாக்களையும் சந்தித்தேன். பல்வேறு கலாச்சாரங்கள் பாரம்பரியங்கள், பல பாஷை காரர்கள் என்னோடு தங்கள் கதையை பரிமாறிக் கொண்டனர். சிலரை சந்திக்கும் சிலாக்கியத்தை நான் பெற்றேன். அநேகர் என் கணனியில் ‘வரவு பெட்டியில்’ வந்து சேர்ந்த பெண்களின் பெயர்களே என்ற போதிலும் அவைகளால் நான் பயனடைந்தேன். சவால் பெற்றேன், ஆசிர்வாதம் பெற்றேன். இவைகள் எல்லாம், ஜீவ விருட்சத்தின் பக்கங்கள் மூலமாக இயேசு கிறிஸ்து நிறைவேற்றியவை.

நான் மிகவும் எதிர்பாராதது, இரண்டாவது முறையாக எனக்கு ஜீவ விருட்சத்தின் ஆசிரியர் பொறுப்பு கொடுக்கப்பட்டதே. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மீண்டும் உலக ஏரியாக்களை சந்திப்பேன் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மீண்டும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆசிரியராக இருப்பதற்கு எனக்கு அழைப்பு கொடுத்த உலக செயற்குழுவுக்கு, குறிப்பாக அன் கோனன் அவர்களுக்கு நன்றியுடையவளாய் இருக்கிறேன். கேக்கின் மீது ஐஸ் வைத்ததுபோல் இது இருக்கிறது.

மேலும் ஒரு விபத்து எனக்கு காத்திருந்தது. அது ஐஸ்ஸின்மேல் செரி பழங்கள் வைத்தது போல் இருந்தது. கூட்டமைப்பின் சாசனம் கையெழுத்தாகி 75–வது ஆண்டு நிறைவேறிய விழாவை இந்த ஆண்டு குறிக்கிறது. இந்த விசேஷ தருணம் என்னை தாழ்மைப்பட வைப்பதுடன், கௌரவமும் தருகிறது. ஜீவ விருட்சத்தின் பக்கங்களில் சரித்தர நிகழ்வுகளை நான் பதிவு செய்கிறேன். அதற்கான செய்திகளை திரட்டுவதினாலும், படிப்பதினாலும் ஆசிர்வதிக்கப்படுகிறேன். அநேக வேலைகளில் அவர்களுடைய விசுவாசம், தரிசனம், அர்ப்பணிப்பு ஆகியவற்றை எண்ணி பிரமிக்கிறேன். இந்த தேவனின் பெண்கள் ஒரே ஒரு வாஞ்சையால் முன்னேறி செல்ல தூண்டப்பட்டார்கள். அதுதான், “கிறிஸ்துவை அறிவதும், அவரை அறிவிப்பதும்,” என்ற நோக்கம். இந்த வாஞ்சை அவர்கள் வாழ்வில் ஒரு மாற்றத்தை உண்டாக்கியது. இந்த வாஞ்சை நம் வாழ்விலும் ஒரு மாற்றத்தை கொண்டுவரும்

டாரதி குமார்

Dorothy Sampath Kumar: Editor
"*Estelle*" # 35,rinity Christina Layout, Opp. SAIACS, Kothanur
BANGALORE - 560 077 - INDIA

M: +91-09483505359 T: +91-80-28445359 E: dorothykumar17@gmail.com

designed by
creative designs
creativedesignspoint@gmail.com
99862 72813